**அலகு – 19**

## உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

**படைப்பாக்க உத்திகள்**

**உவமை**

ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நம்மிடம் இயல்பாக அமைந்துள்ள பண்பாகும். தெரிந்தவற்றைக் கொண்டு தெரியாதவற்றை அறிந்துகொண்டு மனித அறிவு வளர்ந்து வந்திருக்கிறது. மொழி தோன்றிய அன்றே உவமையும் தோன்றியிருக்க வேண்டும். கருத்தைச் சொல்கையில் கேட்போர் மனத்தை ஈர்க்கும் வகையிலும் சொல்வதை எளிதில் உணரும் வகையிலும் உவமைகளை (ஒப்பீடுகளை)ப் பயன்படுத்தினர்.

உவமை வினை(தொழில்), பயன், வடிவம்(மெய்), உரு(நிறம்)என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும் என்பார் தொல்காப்பியர்.

வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்
(தொல்காப்பியம் – 1222)

புலி போலப் பாய்ந்தான் – வினை (தொழில்)

மழை போலக் கொடுக்கும் கை – பயன்

துடி போலும் இடை – வடிவம் (மெய்)

தளிர் போலும் மேனி – உரு (நிறம்)

கண்ணன் புலிபோலப் பாய்ந்தான் என்பதில் கண்ணன் – உவமேயம் (பொருள்), புலி உவமானம் (உவமை), போல உவம உருபு, பாய்தல் – பொதுத்தன்மை. இந்த நான்கு உறுப்புகள் உவமையை அமைக்கின்றன.

ஒன்றை விளக்கவும் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் உவமையே எளியதும் தொன்மை மிக்கதாகவும் உள்ளது. சங்கப்பாடல்களில் பெரும்பாலும் உவமை அணியே இடம்பெற்றுள்ளது. பிற அணிகள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தைத் தொகுத்தவர்கள் பாடல் ஆசிரியர்களின் பெயர் தெரியாதபோது அப்பாடலில் உள்ள உவமையைக் கொண்டே பெயர் சூட்டினர். செம்புலப்பெயல்நீரார், தேய்புரிபழங்கயிற்றினார், அணிலாடு முன்றிலார் என்பவை அப்படிப்பட்ட பெயர்கள்.

‘ஊர்க் குறுமாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே மற்றதன்
துன்னரும் கடாஅம் போல
இன்னாய் பெரும!நின் ஒன்னா தோர்க்கே’

(புறம்–94)

ஔவையார் அதியமானின் வெற்றிப் புகழையும் வீரச் சிறப்பையும் மிகச் சுருங்கிய அடிகளில் அழகாகப் புனைகிறார். குளத்தில் ஊர்ச்சிறு பிள்ளைகள் யானைமீது நீரை இறைத்தும் வெண்கொம்புகளைத் கழுவியும் விளையாடுவர். அவ் யானைக்கு மதம் பிடித்துவிட்டால் யாரும் பக்கத்தில் அணுக முடியாது. அதியமானும் அப்படிப்பட்டவன்தான். பரிசிலர்க்கு இனியன். பகைவர்க்கு இன்னாதவன். யானை பற்றிய உவமை இப்பாடலுக்கு உயிரூட்டுகிறது.

கண்ணீரை நீ
துடைத்த போது
நட்சத்திரங்கள் துடைக்கப்பட்ட
வானம் போல்
உன் முகம்
இருண்டு போயிருந்தது.....

என்னும் புதுக்கவிதை அடிகளிலும் உவமை அமைந்துள்ளதைக் காணலாம்.

**வினை உவமை**

அவர்கள் மூளையில்

விதையைப் போல்

தூவப்பட வேண்டிய அறிவு

ஆணியைப்போல்

அறையப்படுகின்றது.

**பயன் உவமை**

வறண்ட வாழ்வு

துளிர்க்க

மழைபோல் வந்தாய் நீ!

**மெய் உவமை (வடிவம்)**

சுருக்கிய

குடையைப் போலத்

தோன்றும்

அசோகமரம்.

**உரு உவமை (நிறம்)**

சோடிய விளக்காய்

மாலைநேரச் சூரியனின்

மஞ்சள் வெளிச்சம்

தெருவில் நிரம்பி வழிந்தது.

ஆகிய கவிதைகளில் உவமை தோன்றும் களங்கள் வெளிப்பட்டுள்ளன.

**உருவகம்**

ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்பொழுது அது உருவகம் எனப்படுகிறது. உவம உருபுகளை விரித்துச் சொல்வதைவிடத் தொகுத்தும் சுருக்கியும் சொல்லுவதில் ஆற்றலும் அழகும் இனிமையும் இருப்பது தெரிந்திருக்கும். அந்தவகையில் உவமை, உவமைத்தொகையாகி உருவகமாக ஆயிற்று.

உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக்கூறுவது உருவகம் ஆகும். உருவகத்தொடரில் உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) முன்னும், உவமை (ஒப்பாகக் காட்டப்படும் பொருள்) பின்னுமாக அமையும்.

உவமையின் செறிவார்ந்த வடிவமே உருவகம். தாமரை போலும் முகம் என்ற உவமை செறிவூட்டப்பட்டு முகத்தாமரை என உருவகத்தை உருவாக்குகிறது. உவமையை விட உருவகம் ஆழமானது. உவமை அணியில் உவமானமும் உவமேயமும் வேறுவேறானவை என்ற எண்ணம் இருந்துகொண்டிருக்கும். உருவகத்தில் இரண்டும் ஒன்றே என்ற உணர்வு கிடைக்கிறது.

தீ போல் சினம் என்பதைச் சினத்தீ என்பார் பாரதியார். பாடல் முழுவதும் உருவகமாக அமைவதும் உண்டு.

சுட்டும் விழிச்சுடர்தான் – கண்ணம்மா
        சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி – கண்ணம்மா
        வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப் புடவை
        பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் – தெரியும்
        நட்சத்திரங்களடி...

– பாரதி (கண்ணம்மா என் காதலி)

என்னும் கவிதையில்தான் எத்தனை உருவகங்கள். பாஞ்சாலி சபதத்தில் அர்ச்சுனன் பாஞ்சாலியிடம் கதிரவன் ஒளிபட்டு விதவிதமான மாயம் கொள்ளும் மேகங்களுக்குக் கூறுகின்ற உருவகங்கள் உள்ளம் கவர்ந்தவை. தீயின் குழம்புகள், செழும்பொன் காய்ச்சிவிட்ட ஓடைகள், தங்கத்தீவுகள், நீலப்பொய்கைகள், தங்கத்தோணிகள், கருஞ்சிகரங்கள், தங்கத் திமிங்கலங்கள் என்றெல்லாம் உருவகிப்பது அழகூட்டுகிறது.

உருவகத்திலும் வினை உருவகம், பயன் உருவகம், வடிவ (மெய்) உருவகம், உரு (நிறம்) உருவகம் என்ற பகுப்பு உண்டு.

எண்ணவலை பின்னும் மூளைச் சிலந்தி... (சிந்தனை) – வினை

ஆவேசப் புயல்களாலும் அசைக்க முடியாத ஆகாசப் பூ... (கதிரவன்) – பயன்

நீலவயலின் நட்சத்திர மணிகள்... (வானமும் விண்மீன்களும்) – மெய்

மலைக்கிழவியின் நரைத்த கூந்தல்... (அருவி) – நிறம்

**உள்ளுறை உவமம்**

கவிஞர் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவதை உள்ளுறை உவமம் (உவமை) என்பர்.

உள்ளுறை உவமம் என்பது தமிழ் இலக்கியத்திற்கே உரிய ஒப்பற்ற நெறி. அன்பிற்கு ஆட்படும் தலைவன் தலைவியரின் எண்ணங்களைச் சொற்களால் வெளிப்படுத்தாமல் நாகரிகமாக மறைத்துக் கூறுவதற்காக அமைத்துக்கொள்ளும் வடிவமாகவும் இதைக் கருதுகின்றனர்.

இலக்கியங்களில் காணப்படும் கருப்பொருள்களின் காட்சி இயற்கைப் புனைந்துரைகளாக மட்டும் நின்றுவிடாமல், பாடல்களில் இடம்பெறும் மாந்தர்களின் உள்ளத்தெழும் உணர்வுகளின் குறிப்புப் பொருளாகவும் உள்ளுறை அமையும்.

ஓவியம், சிற்பம் முதலிய நுண்கலைகளிலும் குறிப்புப் பொருள்கள் உண்டு. ஆனால், அவை எல்லாருக்கும் எல்லாக் காலத்திலும் விளங்கும் என்று கூறமுடியாது.

கவிதைகளில் உள்ள குறிப்புப்பொருள் காலம் கடந்து நிற்கும் ஆற்றல் உடையது. எனவே கருப்பொருள் கொண்டு விளக்கப்படும் குறிப்புப் பொருளாகிய உள்ளுறை உவமம் தமிழிலக்கியத்தின் நேரிய, இனிய, நாகரிக வழியாகும்.

தோழிக்குச் சொல்வதுபோல் தலைவி, மறைந்து நிற்கும் தலைவனுக்குச் சொல்வதாகப் பெருங்குன்றூர் கிழார் பாடிய பாடல் ஒன்றில் உள்ளுறை உவமம் அமைந்துள்ளதைக் காண்போம்.

‘ஈயல் புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்‘

– அகம். 8

தலைவன் பிறர் அறியாமல் தலைவியைச் சந்திக்க இரவு நேரத்தில் வருகிறான். அவ்வேளையில் பசியுடன் அலையும் கரடியொன்று ஈசல்கள் நிறைந்த புற்றில் கையைவிட்டுப் பார்க்கிறது. அந்த ஈசல் புற்றில் சுருண்டு படுத்திருந்த பாம்பினைக் கரடி அறியவில்லை. கரடியின் நகங்கள் பட்டு, பாம்பு வலியால் துடிக்கிறது. இங்குக் கரடியின் செயலும் பாம்பின் துன்பமும் காட்டப்படுகின்றன.

ஆனால், உள்ளே உறைந்திருக்கும் செய்தி வேறு. இரவு நேரத்தில் காட்டைக் கடந்துவரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி வருந்துவதை இப்பாடல் தெரிவிக்கிறது. கரடி தலைவனுக்கும் பாம்பு தலைவிக்கும் குறியீடுகளாய் அமைந்து உள்ளுறை உவமம் உருவாகிறது. மேலும் இப்பாடலில் உள்ளுறை உவமத்துடன் இறைச்சிப் பொருளும் அமைந்துள்ளது.

**இறைச்சி**

உள்ளுறை போன்றே இறைச்சி என்பதும் அகப்பாடலில் வருகின்ற மற்றொரு உத்தி ஆகும். இதுவும் குறிப்புப்பொருளில்தான் வரும்.

இறைச்சியில் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே

(தொல். பொருள். 36)

இறுத்தல் என்றால் தங்குதல் எனப் பொருள்படும். உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும். இது வடமொழியினர் குறிப்பிடுகிற தொனிக்கு இணையானது. தொனி அகப்பாடலிலும் புறப்பாடலிலும் வரும். ஆனால், இறைச்சி அகப்பாடலில் மட்டுமே வரும்.

‘நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழிஅவர் சென்ற ஆறே‘

(குறுந்தொகை – 37)

தலைவன் விரைவில் வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள். தலைவன் செல்லும் வழியில் யானை தன் பெண்யானையின் பசியைப் போக்குவதற்காக ’யா’ மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள ஈரச்சுவையைப் பருகச்செய்யும். இதுதான் பாடலின் கருத்து. ஆனால், இதில் சொல்லப்படாத குறிப்பு ஒன்றுள்ளது. தலைவன் இந்த அன்புக்காட்சியைப் பார்ப்பான்; உடனே திரும்பி வந்து தலைவியின் துன்பத்தைத் தீர்ப்பான் என்பது இதிலுள்ள குறிப்புப்பொருளாகும். இக்குறிப்புப்பொருளே இறைச்சி ஆகும். உரிப்பொருளின் புறத்தே நின்று அதன் கருத்தை மேலும் சிறப்பிக்கப் பயன்படுகிறது இறைச்சி.

சொல்லாமல் சொல்வதில்தான் கவிதை இன்பம் சிறக்கிறது. தலைவனின் செயலைக் கண்டிப்பதற்கும் எள்ளி நகையாடுவதற்கும் வருத்தத்தை வெளிப்படுத்தவும் திருமணத்தை வலியுறுத்தவும் இறைச்சி உத்தி பயன்படுகிறது.

'நீ விளையாடி மகிழும் இடத்தில் உள்ள இப்புன்னைமரம் உன்னைவிடச் சிறந்தது என்றும் உனக்குத் தங்கையாவாள் என்றும் நற்றாய் என்னிடம் கூறினாள். அதனால்,

இம்மரத்தடியில் உம்முடன் விளையாட நாணுகிறேன். ஏனெனில் தங்கை அருகிருக்க தலைவனுடன் பழகுவது முறையா?' என்று தலைவி தலைவனிடம் கூறினாள்.

நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே

(நற்றிணை – 172)

இப்பாடலில், நாம் வேறு இடத்தில் சந்திக்கலாம் என்னும் குறிப்புப்பொருளும் தலைவியைத் தலைவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்னும் குறிப்புப் பொருளும் அமைந்துள்ளன. இக்குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும்.

| |
|---|
| கவிஞர், தெரியாத பொருள் ஒன்றைத் தெளிவாக விளக்குவதற்குத் தெரிந்த பொருளை உவமையாகப் பயன்படுத்துவர். வெளிப்படையாகப் பொருள் கூறினால் உவமை. உவமைக்குள் மற்றொரு பொருளைக் குறிப்பாக உணர்த்தினால் உள்ளுறை உவமை. குறிப்புப் பொருளுக்குள் மேலும் ஒரு குறிப்புப் பொருள் அமைந்திருக்குமானால் அதற்கு இறைச்சி என்று பெயர். உள்ளுறை உவமம் கவிதைப் பொருளோடு சேர்ந்து காணப்படுகிறது. இறைச்சிப் பொருள் கவிதைப்பொருளின் புறத்தே குறிப்புப் பொருளாய் வெளிப்படுகிறது. |

**உவம உருபுகள்**

தமிழ்ச்செல்வி குயில்போலப் பாடினாள்.

இத்தொடர் குரலினிமையை உணர்த்துகிறது. குரலினிமைக்குக் குயிலின் குரல் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஒருபொருளைச் சிறப்பித்துக்கூற, அதனைவிடச் சிறந்த வேறொரு பொருளோடு ஒப்பிடுவதே உவமித்துக் கூறுதல் எனப்படும். இவ்வாறு, உவமித்துக் கூறுவதனால் புரியாதன எளிதில் புரியும்; கேட்டார்க்கு இன்பம் பயக்கும். சிறப்பிக்கப்படும் பொருள் உவமேயம் எனப்படும். அதற்கு ஒப்பாகக் காட்டப்படும் பொருள் உவமை எனப்படும். இதனை உவமானம் எனவும் கூறுவர். உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் வரும் உருபு, உவம உருபு எனப்படும்.

தமிழ் தேன்போல இனிமையானது.

இத்தொடரில் போல என்பது உவம உருபு. உவம உருபுகள் பல. அவற்றையும், அவை தொடரில் அமைந்து வருவதனையும் காண்போம்.

| **உவம் உருபு** | | **தொடர்** |
|---|---|---|
| 1. போல | – | கிளிபோலப் பேசினாள். |
| 2. புரைய | – | வேய்புரை தோள். |
| 3. ஒப்ப | – | தாயொப்பப் பேசும் மகள். |
| 4. உறழ | – | முழவு உறழ் தடக்கை. |
| 5. அன்ன | – | மலரன்ன சேவடி. |

மேற்கண்டவை போன்ற உவம உருபுகள் பல உள்ளன.

போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே. – நன்னூல், 367

**விரியுவமை**

உவமை, உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) ஆகிய இரண்டனையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரியுவமை. இஃது, உவமைத் தொடர் எனப்படும்.

(எ–டு) தேன்போன்ற மொழி.

இத்தொடரில் தேன் உவமை; மொழி – உவமேயம்; போன்ற உவம உருபு. உவம உருபு, இத்தொடரில் வெளிப்பட வந்துள்ளதனால் இது, விரியுவமை எனப்படும். இஃது, உவமைத் தொடராகும்.

**தொகையுவமை**

தேன்மொழி

இதில் உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இதனைத் தொகையுவமை என்பர். இதனை, உவமத்தொகை எனவும் கூறுவர்.

உவமை உருவக மாற்றம்

பவளவாய் (பவளம் போன்ற வாய்) – இத்தொடரில் வாய் பவளத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

பவளம் – உவமை, வாய் உவமேயம் (உவமையை ஏற்கும் பொருள்)

இவ்வாறு, ஒருபொருளை அதனைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும்.

வாய்ப்பவளம். இத்தொடரில் வாயே பவளம் எனப் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. உவமைத்தொகையில் முதல் பகுதி (பவளம்) உவமானமாகவும் அதன் அடுத்த பகுதி உவமேயமாகவும் (வாய்) அமையும். உருவகத்தில், உவமேயம் முதல் பகுதி; உவமை அடுத்த பகுதியாக இருக்கும். இவ்வாறு உவமானத்தையும்

உவமேயத்தையும் வேறுபடுத்தாது, இரண்டும் ஒன்றே என ஒற்றுமைப்படுத்திக் காட்டுவதே உருவகம்.

| உவமை | | உருவகம் |
|---|---|---|
| அமுதமொழி | – | மொழியமுது |
| கயற்கண் | – | கண்கயல் |
| தேன்தமிழ் | – | தமிழ்த்தேன் |
| பூவிரல் | – | விரல்பூ |
| மதிமுகம் | – | முகமதி |
| மலரடி | – | அடிமலர் |
| முத்துப்பல் | – | பல்முத்து |
| விற்புருவம் | – | புருவவில் |
| மலர்ப்பாதம் | – | பாதமலர் |

**பொருள் இலக்கணம்**

**அகப்பொருள்**

பொருள் என்பது ஒழுக்கமுறை. அறவழியில் பொருளீட்டிப் பல்லாரோடு பகுத்துண்டு வாழும் வாழ்வியல் நெறிமுறைகளைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போற்றிக் காத்தவர், தமிழர். வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தவர் தமிழரே!

பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகைப்படும்.

**அகப்பொருள்**

அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும்.

அவற்றுள் முதலைந்தும் அன்பின் ஐந்திணை என்று வழங்கப்படும்.

அகப்பொருளுக்குரிய பொருள்கள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன.

**முதற்பொருள்**

அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

நிலம் ஐவகைப்படும்.

**ஐவகை நிலங்கள்**

1. குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்
2. முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்
3. மருதம் – வயலும் வயல்சார்ந்த இடமும்
4. நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடமும்
5. பாலை – மணலும் மணல்சார்ந்த இடமும்.

பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்.

**பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)**

1. கார்காலம் – ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக்காலம் – மார்கழி, தை
4. பின்பனிக்காலம் – மாசி, பங்குனி
5. இளவேனிற்காலம் – சித்திரை, வைகாசி
6. முதுவேனிற்காலம் – ஆனி, ஆடி.

**சிறுபொழுது (ஒருநாளின் ஆறு கூறுகள்)**

1. காலை – காலை 6 மணிமுதல் 10 மணிவரை
2. நண்பகல் – காலை 10 மணிமுதல் 2 மணிவரை
3. ஏற்பாடு – பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை
4. மாலை – மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை
5. யாமம் – இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை
6. வைகறை – இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை

(எற்பாடு – எல் + + பாடு. எல் ஞாயிறு, பாடு மறையும் நேரம்.)

**திணையும் பொழுதும்**

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | ஏற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

**கருப்பொருள்**

அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு முதலியன பொருள்கள் கருப்பொருள் எனப்படும்.

**புறப்பொருள்**

புறப்பொருள் எனப்படுவது, வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுவது. அகப்பொருள் வாழ்வியல் எனில், புறப்பொருள் உலகியல் ஆகும். புறம்பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள் வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்.

1. **வெட்சித்திணை:** பகைநாட்டின்மீது போர் தொடங்குமுன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக்கூடாது எனக் கருதும் மன்னன், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச்செய்வது வெட்சித்திணை. அவ்வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வார்கள்.
2. **கரந்தைத் திணை:** வெட்சி வீரர்களால் கவர்ந்துசெல்லப்பட்ட தம் ஆநிரைகளைக் கரந்தைப் பூவைச் சூடிச்சென்று மீட்பது, கரந்தைத்திணை.
3. **வஞ்சித்திணை:** மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது, வஞ்சித்திணை.
4. **காஞ்சித்திணை:** தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.
5. **நொச்சித்திணை:** பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது நொச்சித்திணை.
6. **உழிஞைத்திணை:** உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.
7. **தும்பைத் திணை:** பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வீரர்களுடன் போரிடுவது தும்பைத் திணை. இவ்வீரர்கள் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவர்.
8. **வாகைத்திணை:** வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை.
9. **பாடாண்திணை:** பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை. (பாடு + ஆண் + திணை = பாடாண்திணை)

10. **பொதுவியல் திணை:** வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணை.

11. **கைக்கிளைத்திணை:** கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைப்படும்.

12. **பெருந்திணை:** பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.

வெட்சி நிரைகவர்தல், மீட்டல் கரந்தையாம்,
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் உட்கா (து)
எதிரூன்றல் காஞ்சி, எயில்காத்தல் நொச்சி,
அதுவளைத்த லாகும் உழிஞை, – அதிரப்
பொருவது தும்பையாம், போர்க்களத்து மிக்கார்
செருவென்றது வாகையாம்.

- புறப்பொருள் வெண்பாமாலை